## சாலை விபத்தில் உயிரிழந்த


# 2 கழகக் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம்!


## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

மதுரை, டிச.24-

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த விழுப்புரம் மத்திய மாவட்டம் மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரவணகுமார் ஆகிய இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**

**இதுவரை 12 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடியே 20 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.**




மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச்செல்வன் ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன், திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ. ராம்பிரசாத், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் ஆகிய 10 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

25.10.2025 அன்று விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான மு.இராமதாஸ் அவர்கள், விழுப்புரம் மாம்பழப்பட்டு சாலை திருச்சி பைபாஸ் பாலத்தின்கீழ் சர்வீஸ் சாலையில் நின்றிருந்தபோது கார் மோதிய விபத்தில் சிக்கியும் 26.08.2025 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கு.சரவணகுமார் அவர்கள், வெண்ணந்தூர், மடம் பேருந்து நிறுத்தம் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரி மோதிய விபத்தில் சிக்கியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இவ்விரண்டு குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ் அவர்களின் மனைவி திருமதி சௌமியா அவர்களிடமும் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார் அவர்களின் மனைவி திருமதி சங்கீதா அவர்களிடமும் நேற்று (23.12.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர்கள் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

# 100 நாள் வேலை இனி இல்லை - ஆர்ப்பாட்டத்திற்கான முழக்கங்கள்!

**ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம்
நூறுநாள்வேலையை நிறுத்தத்துடிக்கும்
ஒன்றிய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்**

**ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம்
ஏழைகள்வயிற்றில் அடிக்கநினைக்கும்
மோடிக்கு எதிரான ஆர்ப்பாட்டம்**

**ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம்
மோடிக்கு வால் பிடிக்கும்
அடிமைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்**

**ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம்
தமிழ்நாட்டை வஞ்சிக்கும்
பாசிச பா.ஜ.க.விற்கு எதிரான ஆர்ப்பாட்டம்**

**முடக்காதே முடக்காதே
100 நாள் வேலையை முடக்காதே**

**நீக்காதே நீக்காதே
அண்ணல் காந்தி பெயரை நீக்காதே**

**குறைக்காதே குறைக்காதே
தமிழ்நாட்டிற்கான நிதியைக் குறைக்காதே**

**அடிக்காதே அடிக்காதே
ஏழைகள் வயிற்றில் அடிக்காதே**

**ஒதுக்காதே ஒதுக்காதே
விவசாயத் தொழிலாளர்களை ஒதுக்காதே!**

**மாற்றாதே மாற்றாதே
பழைய முறையை மாற்றாதே!**

**நிறுத்தாதே நிறுத்தாதே
வறுமை ஒழிப்பு திட்டத்தை நிறுத்தாதே !**

**தள்ளாதே தள்ளாதே
வறுமையில் மீண்டும் தள்ளாதே !**

**திணிக்காதே திணிக்காதே
திட்டத்தின் பெயரால் இந்தியை திணிக்காதே!**

**புறக்கணிக்காதே புறக்கணிக்காதே
தாய்தமிழ் மொழியை புறக்கணிக்காதே!**

**தண்டனையா? தண்டனையா?
வறுமையை ஒழித்த தமிழ்நாட்டிற்கு
தண்டனையா?**

**சுமத்தாதே! சுமத்தாதே!
மாநில அரசின் மீது நிதிச்சுமையை சுமத்தாதே.!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
நூறு நாள் வேலையை முடக்க நினைக்கும்
பா.ஜ.க.வைக் கண்டிக்கின்றோம்!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
மோடியின் சதிக்கு ஒத்து ஊதும்
அடிமை அ.தி.மு.க.வை கண்டிக்கின்றோம்!**

**திரும்ப பெறு! திரும்ப பெறு!
ஏழை மக்களின் வாழ்வை அழிக்கும்
புதிய மசோதாவை திரும்ப பெறு!**

**திரும்பப்பெறு திரும்பப்பெறு
புதிய சட்டத்தை திரும்பப்பெறு**

**வாழவிடு வாழவிடு
கிராமமக்களை வறுமையின்றி வாழவிடு!**

**கிராமத்தில் வேலை செய்ய
டெல்லியிடம் அனுமதியா ?
அங்கிருந்து ஆட்சி செய்ய
தமிழ்நாடு என்ன கால்மிதியா ?**

**ஈரமில்லையா ஈரமில்லையா ?
நெஞ்சில் துளியும் ஈரமில்லையா ?
கேட்கவில்லையா கேட்கவில்லையா ?
ஏழைகள் கூக்குரல் கேட்கவில்லையா ?**

**வறுமையை ஒழிக்கும் திட்டத்தை
தடுத்து நிறுத்த துடிப்பதேன்?
பட்டினி போக்கும்
நூறுநாள் வேலையைத் தடுத்து
நிறுத்த துடிப்பது ஏன் ?**

**மோடியே மோடியே.!
கிராமங்களை நாசம் செய்யாதே. .
மோடியே மோடியே
மக்களை வறுமையில் தள்ளாதே.**

**அடிக்காதே அடிக்காதே
ஏழைகள் வயிற்றில் அடிக்காதே**

**முடக்காதே முடக்காதே
நூறுநாள் வேலையை முடக்காதே**

**விடமாட்டோம்! விடமாட்டோம்!
பா.ஜ.க.வின் சதி நிறைவேற விடமாட்டோம்!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
நூறு நாள் வேலையை முடக்க நினைக்கும்
பா.ஜ.க.வைக் கண்டிக்கின்றோம்!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
மோடியின் சதிக்கு ஒத்து ஊதும்
அடிமை அ.தி.மு.க.வை கண்டிக்கின்றோம்!**

**திரும்ப பெறு! திரும்ப பெறு!
ஏழை மக்களை வதைக்கும்
புதிய சட்டத்தைத் திரும்ப பெறு!**

**எங்கே போனார் எங்கே போனார்
அடிமைசாமி எங்கே போனார்**

**கிராம மக்களை கைவிட்டு
மோடி காலில் விழவா போனார் . .**

**எங்கே போனார் எங்கே போனார்
பல்டிசாமி எங்கே போனார்**

**ஊர்மக்களை மறந்து விட்டு
பதுங்குகுழியில் பதுங்கி போனார் . .**

**குரல் கொடுத்தாயா குரல் கொடுத்தாயா
ஏழை மக்களுக்காக குரல் கொடுத்தாயா.?**

**துரோகியே துரோகியே
நயவஞ்சகத்துக்கு துணைபோகும்
பழனிசாமி துரோகியே**

**சதி செய்யாதே சதி செய்யாதே
பா.ஜ.க.வோடு சேர்ந்து சதி செய்யாதே**

**பறிக்காதே பறிக்காதே
நூறுநாள் வேலையை பறிக்காதே**

**வெட்கமில்லையா? மானமில்லையா?
டெல்லிக்கு அடிமையாய் இருக்க
அடிமைசாமியே வெட்கமாயில்லையா?**

**புறக்கணிப்போம் புறக்கணிப்போம்
தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யும்
துரோகிசாமியை புறக்கணிப்போம்**

**விடமாட்டோம்! விடமாட்டோம்!
ஏழைகளின் வாழ்வை அழிக்கத் துடிக்கும்
எதிரிகளின் சதி நிறைவேற விடமாட்டோம்!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
நூறு நாள் வேலையை முடக்க நினைக்கும்
பா.ஜ.க.வைக் கண்டிக்கின்றோம்!**

**கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்!
மோடியின் சதிக்கு ஒத்து ஊதும்
அடிமை அ.தி.மு.க.வை கண்டிக்கின்றோம்!**

**திரும்ப பெறு! திரும்ப பெறு!
ஏழை மக்களின் வாழ்வை அழிக்கும்
புதிய மசோதாவை திரும்ப பெறு!**

**விடமாட்டோம் விடமாட்டோம்
பாசிசசக்திகள் காலூன்ற விடமாட்டோம்**

**போராடுவோம் வெல்வோம்
போராடுவோம் வெல்வோம்
போராடுவோம் வெல்வோம்**

**தமிழ்நாடு போராடும்
தமிழ்நாடு வெல்லும்**